கூடலூர் நகராட்சி (நீலகிரி)

28.02.2018–ம் தேதி புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின்

சாதாரண கூட்டத்தின் பொருட்கள்.

1) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 16 ல் புத்தூர்வயல் பகுதியில் தமிழ்நாடு நகர்புற சாலை உட்கட்டமைப்பு திட்டத்தில் போடப்பட்டசாலையில் சிறுபாலம் அமைத்து தர பொதுமக்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 3 நடு கூடலூர் பகுதியில் பொதுமக்கள் குடிநீர் வழங்க கேட்டுக்கொண்டதற்கிணங்க பழுதடைந்த குடிநீர் குழாய்களை மாற்றியமைத்தல் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

3) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 12 துப்புக்குட்டிபேட்டை கல்குவாரி பகுதியில் கழிவு நீர் கால்வாயின் பழைய மூடிகளை உடைத்து புதிய மூடிகளை அமைத்தல் பணிக்கு தோராயமாக தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.200000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்

4) தமிழ்நாடு நகரியியல் பயிற்சி மையம், கோயம்புத்தூர் நிறுவனத்திற்கு 2017–2018 ஆண்டிற்க்கான ஆண்டு சந்தா தொகை ரூ.20000/–ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்

5) இந்நகராட்சி பொறியியல் பிரிவிற்கு சொந்தமான குடிநீர் வாகனம் (TN 43 Z 5433) வாகனத்திற்கு டயர்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்ய இயலாததால் குடிநீர் வாகனத்திற்கு அவசரம் அவசியத்தை கருத்தில் கொண்டு குடிநீர் வாகனத்திற்கு நான்கு புதிய டயர்கள் விநியோகம் செய்ய ஆகும் தோராயமாக செலவினத் தொகை ரூ.48000/– ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்

6) இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 43 Y 0437 மற்றும் கனரக வாகனங்கள் TN 43 Z 4447, TN 43 Z 4448, TN 43 Z 4443 மற்றும் TN 43 Y 8698 ஆகியவற்றை நகராட்சியில் ஓட்டுநர் பணியிடம் இல்லாததால் மாவட்ட ஆட்சியர் ஊதிய நிர்ணய அடிப்படையில் தனியார் ஒப்பந்த ஓட்டுநர்களை பணியமர்த்த 1 வருடத்திற்கு உத்தேச செலவினம் ரூ.1435375/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்

7) முதியோர் உதவித் தொகை, விதவை உதவி தொகை, முதிர்கன்னி , மாற்றுத் திறனாளி மற்றும் DDWP உதவி தொகை பெறுவதற்கு வறுமை கோட்டிற்கு கீழ் சான்றிதழ் வழங்க கோரி வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் 9 நபர்களுக்கு மேற்படி பென்சன் பெறுவதற்காக மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | திரு.ராஜேந்திரன், த/பெ.வேல்முருகன், 13/467, காசிம்வயல், கூடலூர் | – | முதியோர் |
| 2) | திரு.ராஜகோபால் ,த/பெ.ஆண்டி,17/538நு, கோடமூலா, கூடலூர் | – | முதியோர் |
| 3) | திருமதி.மீனாட்சி,க/பெ.குஞ்சன்(லேட்), ஏழுமுறம், கூடலூர் | – | விதவை |
| 4) | திரு.ராஜேந்திரன், 1/282,கே.கே.நகர், கூடலூர் | – | முதியோர் |
| 5) | திரு.முத்து கிருஷ்ணண், த/பெ.நல்லையா,7/154,கோழிப்பாலம், கூடலூர் | – | முதியோர் |
| 6) | திருமதி.ஸ்ரீமந்தினி,க/பெ.மணி(லேட்), 14/152,அத்திபாளி, கூடலூர் | – | விதவை |
| 7) | திரு.காளிமுத்து, த/பெ.ஆறுமுகம்,13/310,காசிம்வயல்,கூடலூர் | – | முதியோர் |
| 8) | திரு.முகம்மதுயூசப்,த/பெ.அப்துல் முத்தலிப், 6/92, நடு கூடலூர், கூடலூர் | – | முதியோர் |
| 9) | திரு.ரங்கசாமி, த/பெ.முத்துசாமி, 9/318, சளிவயல், நந்தட்டி, கூடலூர் | – | மாற்றுதிறனாளி |

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

8) இந்நகராட்சியின் அலுவலக கட்டிடதில் உள்ள சோலார், வசூல் மையம் மற்றும் கணிணிகளுக்கான 5,3 மற்றும் 5 KVA UPS களுக்கான 33 எண்ணிக்கையிலான பேட்டரிகளுக்கு ஆசிட் மற்றும் Destil water நிரப்பும் பணிக்கு ரூ.20000/– ற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 198 நாள் 31.10.2017 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணியினை மேற்கொள்ள 20.02.2018 அன்று அறிவிப்பு செய்யப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளியில் பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விபரம்

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | உள்ளூர் விலைப்புள்ளிதாரர் விபரம் | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சியின் அலுவலக கட்டிடத்திலுள்ள5,3 மற்றும் 5 KVA UPS களுக்கான 33 எண்ணிக்கையிலான பேட்டரிகளுக்கு ஆசிட் மற்றும் Destil water நிரப்புதல் | ரூ.20000/– | M/S S.S.Auto Electriclal, chevidipet, Gudalur | Rs.18140/- |
| | | | M/S Sun Auto Electriclal, TK Pet, Gudalur | Rs.19790/- |
| | | | M/S Elite Auto Electriclal, Kalampuzha road, Gudalur | Rs.20780/- |

மேற்படி ஒப்பு நோக்கு பட்டியலின்படி குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர் M/S S.S.Auto Electriclal, chevidipet, Gudalur அவர்களின்விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கவும் பணிக்கான தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

9) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் 49 மின்பம்பு மோட்டார்களை இயக்குவதற்கு 2014–2015 ம் ஆண்டு முதல் பணியாற்றும் தினக்கூலி பணியாளர்களுக்கு உண்டான மாதாந்திர செலவின தொகை ரூ.49000/– ற்கு நகர்மன்ற தீர்மானம் எண் 43 நாள் 29.10.2016 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதிக்காலம் 31.03.2018 ல் முடிவடைவதாலும் 2018–2019 ம் ஆண்டிற்கு குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள சந்திரசேகர், அஜந்தா கன்ஸ்டரக்ஷன், கூடலூர் அவர்களுக்கு 2018–19 ம் ஆண்டில் மேற்கண்ட பணியினை செய்ய ஒராண்டு காலநீடிப்பு செய்து ஏப்ரல் 2018 முதல் மார்ச் 2019 ரூ.49000x மாதம் வீதம் ரூ.588000/–(ரூ.ஐந்து இலட்சத்து என்பத்து எட்டாயிரம் மட்டும்) செலவு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்

10) இந்நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 21 வார்டு வரை உள்ள பகுதியில் உள்ள குடியிருப்பு (ம) கடைகளுகூகான 2017–18 ம் ஆண்டிற்கான சொத்துவரி,குடிநீர் கட்டணம், தொழில்வரி, கடை உரிமைக்கட்டணம்(ம) )இதர கட்டணங்களின் நிலுவைத் தொகை செலுத்த கோரி வாகனத்தில் ஒலி பெருக்கி 27 நாட்களுக்கு காலை முதல் மாலை வரை விளம்பரம் செய்வது தொடர்பாக ஒலி பெருக்கி உரிமையாளர்களிடமிருந்து விலைபுள்ளி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | உரிமையாளர் பெயர் | 1நாளைக்கு விளம்பரம் செய்வதற்கு செலவுத் தொகை |
|---|---|---|
| 1 | திரு.க.செந்தில்குமார், சபரி மைக் செட்டிங்(ம) விளம்பரம்,செம்பாலா,கூடலூர் | ரூ.2800/– |
| 2 | அமிர்தா சவுண்ட் சர்வீஸ், எம்.டி.நகர்,மைசூர் சாலை, கூடலூர் | ரூ.2950/– |
| 3 | ஞமுஞ சவுண்ட் ஆண்ட் செட்டிங்ஸ், கூடலூர் | ரூ.3100/– |

**அலுவலக குறிப்பு** – வரிசை எண் 1 ல் கண்டுள்ள திரு.க.செந்தில்குமார் என்வரின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை அனுமதிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

11) நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண் RoC No.13277/2017/WS நாள் 18.02.2017 ல் கோரியுள்ளபடி அனைத்து நகராட்சி பகுதிகளிலுள்ள பொதுமக்களுக்கு தற்போழுது 3 நாட்களுக்கு ஒரு முறை குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மற்றும் பல பகுதிகளில் உள்ள மெயின் குழாய்கள் மற்றும் துணை ஆதார குழாய்கள் பல இடங்களில் இல்லாத காரணத்தினாலும் மற்றும் கோடை காலங்களில் உள்ளூர் நீர்தேக்கங்களில் ஊற்று நீர் வற்றி வருவதாலும் அப்பகுதி மக்களுக்கு சீராக குடிநீர் விநியோகம் செய்ய இயலுவதில்லை. நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் அவர்களின் உத்திரவின் பேரில் அனைத்து பகுதிகளிலும் தினமும் குடிநீர் வழங்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளதாலும் மற்றும் நகர் பகுதியானது மேடு பள்ளங்கள் அதிகமாக உள்ளதால் தாழ்வான பகுதிக்கு குடிநீர் விநியோகம் செய்ய நடைமுறையில் உள்ள குடிநீர் விநியோகம் மற்றும் புதிய திட்டம் குறித்து ஆராய்ந்து பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக கலந்தாலோசகர்(Consulttant) அமர்த்தி திட்ட அறிக்கை சமர்ப்பிக்கவும் மற்றும் ஆகும் செலவினத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** – அனுமதி வழங்கலாம்

12. அரசாணை நிலை எண் 92 நாள் 03.07.2007 ன்படி நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறையின்படி கூடலூர் நகராட்சி வணிக வளாக கடைகளுக்கு 3 ஆண்டுகளுக்கு 15 சதவீதம் 9 ஆண்டுகளுக்கு கடை உரிமைத்தை நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் பாரதிதாசன்வணிக வளாகத்தில் அமைந்துள்ள 4 கடைகள் மற்றும் திருவள்ளுவர் வணிகவளாகத்தில் அமைந்துள்ள 4 கடைகள் மொத்தம் 8 கடைகளுக்கு உரிமைக்காலம் 2018–2019 முதல் 9 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்து அரசாணை 92 ன்படி தற்போது சந்தை நிலவரப்படி மதிப்பீட்டு செய்து உரிமைதாரர்களுக்கு உரிம காலம் நீட்டிப்பு செய்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ஆணையாளர்**
**கூடலூர் நகராட்சி**